செ.வெ.எண் -34 நாள்:19.02.2018

# அரியலூரில் திங்கட்கிழமை மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 19 பயனாளிகளுக்கு ரூ.8 இலட்சத்து 65 ஆயிரத்து 958 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், திங்கட்கிழமை **"மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்"** மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (19.02.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், அம்மா இருசக்கர வாகனம், இலவச வீட்டுமனைப்பட்டா, முதியோர் உதவித்தொகை, தொகுப்பு வீடுகள், திருமண நிதியுதவி திட்டம் போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய **320** மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டு, இம்மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட சமூக நல அலுவலகம் சார்பில் கலப்பு திருமண நிதியுதவி திட்டம் மற்றும் முதலமைச்சரின் ஏழைப்பெண்ணின் திருமணத்திற்கு திருமாங்கல்யத்திற்கு தங்கம் வழங்கும் திட்டத்தின்கீழ் பட்டம் பெற்ற 5 நபர்களுக்கு தலா ரூ.50,000/- வீதம் ரூ.2 இலட்சத்து 50 ஆயிரத்திற்கான காசோலையினையும், தலா 4 கிராம் தங்க நாணயம் வீதம் 20 கிராம் தங்க நாணயங்களையும், பட்டம் அல்லாதோர் 12 நபர்களுக்கு தலா ரூ.50,000/- வீதம் ரூ.6 இலட்சத்திற்கான காசோலையினையும், தலா 4 கிராம் தங்க நாணயம் வீதம் 48 கிராம் தங்க நாணயங்களையும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 1 மாற்றுத்திறனாளிக்கு ரூ.14,870 மதிப்பில் செயற்கை அவயத்தினையும், 1 பார்வையற்ற மாற்றுத்திறனாளிக்கு ரூ.1,088/- மதிப்பில் பிரெய்லி கை கடிகாரமும் என ஆகமொத்தம் 19 **பயனாளிகளுக்கு ரூ.8 இலட்சத்து 65 ஆயிரத்து** 958 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் வழங்கினார்கள்.

பின்னர், மாற்றுத்திறனாளிகள் வரிசையில் காத்திருக்காமல், அவர்களுக்கான தனி இருக்கையில் அமர்ந்திருந்த மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பெற்று இம்மனுக்களின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலருக்கு உத்தரவிட்டார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட சமூக அலுவலர் ப.பூங்குழலி, துணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புதிட்டம்) ஜெ.பாலாஜி, மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் ஆர்.பாலாஜி மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.